உ

சிவமயம்




# சனிபகவான் வழிபாடு

[நவக்கிரக தோத்திரங்களுடன்]

உ

சிவமயம்



# சனிபகவான் வழிபாடு

[நவக்கிரக தோத்திரங்களுடன்]

## பொருளடக்கம்

1) முகவுரை
2) சனீஸ்வரர் வரலாறு
3) புரட்டாதிச் சனி விரதம் அனுஷ்டிக்கும் முறை
4) சனி பகவான் தோத்திரம்
5) சனீஸ்வரன் போற்றி
6) சனி அஷ்டோத்தர சத நாமாவளி
7) கோளறு திருப்பதிகம்
8) நவக்கிரக போற்றி
9) நவக்கிரகங்களுக்குரிய விசேட தலங்கள்

*தொகுப்பு ஆசிரியர்*
**அருள்சுவாமிநாதன்**

NA

*வெளியிடுவோர்:*
இடைக்காடு இந்துநெறிக்கழகம்
இடைக்காடு, அச்சுவேலி.

09-09-99

# முகவுரை

கிரகங்களின் தோஷங்களால் பீடிக்கப் படாதவர்கள் உலகில் எவருமிலர். அரசன் முதல் ஆண்டிவரை இதன் பலாபலன் களை அனுபவித்தாக வேண்டியுள்ளது. விசேடமாக சனியனைப் போல் கொடுப் பாருமில்லை, சனியனைப்போல் கெடுப் பாருமில்லை. என்ற பழமொழி இவர் மக்கள் மேல் செலுத்தும் கொடுமைக்கும் கரு ணைக்கும் சான்று பகரும். இதனாலேயே இவரை சனியன் என்றும் சனீஸ்வரன் என்றும் அழைக்கின்றோம். பாண்டவர் களின் சொல்லொண்ணாத் துயரத் துக்கு சகுனி மூலம் வித்திட்டவரு மிவரே. நளமகாராசாவிடம் புக்கரனைச் சூதாட வைத்து நாடு, நகரம், மனைவி,

பிள்ளைகள், சொத்து, சுகம் அத்தனை யையும் இழந்து காடேகச் செய்து ஏழரை வரு டங்கள் பெருந்துன்பத்தில் ஆழ்த்திய வரும் இச்சனிபகவானே. அவரதும் ஏனைய கிரகங்களினதும் தோஷங்கள் எம்மி லிருந்து நீங்குவதற்கும் அவர்களின் அருட் கடாட்ச்சத்தைப் பெறுவதற்காக வும் நாம் திருக்கோயில்களுக்குச் சென்று நவக்கிரக தேவர்களை வழிபட்டு வருகின்றோம். விசேடமாகச் சனிக் கிழமை தோறும் (புரட்டாதிச் சனிக் கிழமை) அடியார்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று நவக்கிரக நாயகர்களுக்கு எள்ளெண் ணெய்த் தீபம் ஏற்றி வழிபட்டு வருகின்றார்கள்.

நவக்கிரக நாயகர்களை நாம் வழிபடும் போது எள்ளெண்ணெய்த் தீபத்தை

இரு கைகளாலும் ஏந்தித் திரிகரண சுத்தியுடன் சித்தத்தை இவர்கள்பால் செலுத்திக் குறைந்தது ஒன்பது முறை வலம்வருவது சாலச்சிறந்தது. அப்படி வலம்வரும்போது கோளறு திருப்பதிகத்தையும், நவக்கிரக போற்றியினையும், சனீஸ்வரர் போற்றியினையும், சனீஸ்வரர் அஷ்டோத்தர சத நாமாவளியையும் பாராயணம் செய்து வழிபட்டால் அவர்களின் கருணையையும் கடாட்ச்சத்தையும் விரைவில் பெறலாம். இந்த சிறந்த முறையை அனுஷ்டித்து வழிபடுவதற்கு ஏற்ற முறையில் இடைக்காடு இந்து நெறிக்கழகம் தமது 15வது கழகவெளியீடாக இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து

(08-06-1989) நடைபெற்ற மண்டலா பிஷேக நன்னாளில் வந்த முதலாவது சனிக்கிழமை (10-06-1989) அன்று புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட நவக் கிரக நாயகர்களுக்கு முதல் முதலாக பக்தர்களால் எள்ளெண்ணெய்த் தீபம் ஏற்றப்பட்ட அத்திருநாளில் எமது கழகம் தமது 7 வது கழக வெளியீடாக **நவக்கிரக தோத்திரம்** என்னும் நூலை இலவசமாக வெளியிட்டது. அதன் பின் தமது 14வது கழக வெளியீடாக **திருவாசகத் தேன் துளிகள்** என்னும் நூலை மாணிக்க வாசகர் குருபூசை அன்று (16-07-1999) வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து **சனிபகவான் வழிபாடு** என்ற இந்நூலை இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நவக்கிரக நாயகர்களைப் பிரதிஷ்டை செய்து 10 வது ஆண்டு பூர்த்தி

விழாவாகிய இந்நேரத்தில் வெளியிடு வதில் பேரின்பம் அடைவதுடன். இத் தொண்டை தொடர்ந்து மேலும். மேலும் ஆற்றுவதற்கு எல்லாம்வல்ல எம் குல தெய்வமாகிய புவனேஸ்வரி அம்பாளை வேண்டி நிற்கிறோம்.


**வே. சுவாமிநாதன்**

தலைவர்

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்.

இடைக்காடு இந்து நெறிக்கழகம்.

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் அறநெறிப் பாடசாலை.

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் சிறுவர் பாடசாலை.

*24/5,59 வது ஒழுங்கை. மன்னிங் பிளேஸ். வெள்ளவத்தை. கொழும்பு-06.*

*09-09-1999*

# சனீஸ்வரர் வரலாறு

சூரிய பகவானுக்கும் சாயாதேவிக்கும் மகனாக பிறந்தவர் சனீஸ்வரன். இவருக்கு சீலாதேவி. மந்தாதேவி. சேஸ்டாதேவி ஆகிய மூன்று மனைவிகளும் குளிகன் என்ற மகனுமுண்டு. இவரது ஒருகால் ஊனமானபடியால் நொண்டி நொண்டி மெதுவாகவே நடப்பார். இதனால் சனைச்சரன் என்ற பெயரும் ஏற்பட்டது. இவர் முக்குணங்களிலே தாமசகுணம் படைத்தவர். வில்லைப்போன்ற ஆசனத் தில் மேற்கு முகமாக வீற்றிருப்பவர். காகத்தை வாகனமாகவுடையவர். நீல நிறச் சரீரமும். சூலமும் வில்லும். வரதமும் அபயமும் கொண்ட நான்கு கரங்கள்

உடையவர். காசிக்குச் சென்று தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டதனால் கிரகவல்லமையும். சனீஸ்வரன் என்ற நாமத்தையும் பெற்றார். காசிவிசுவநாதர் ஆலயத்துக்கு வடகிழக்குப் பக்கமாக சனீஸ்வரருக்கென பிரத்தியேகமாக ஒரு கோவில் இன்றும் இருப்பது குறிப்பிடத்தக்கது. (இப்புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்ட சனீஸ்வரர் படம் காசித்திருப்பதியைப் பின்னணியாகக் கொண்டது.) இவர் இரும்பு. எண்ணெய். கருநிறத்தானி யங்கள். பூமியில் புதைத்த புதையல்கள். போன்றவற்றின் அதிபதி. வறுமை. கலகம். நோய். துன்பம். அவமதிப்பு ஆகியவற்றை உண்டாக்க வல்லவர். இவர் நல்ல இடத்தில் தங்கி வலுப்பெற்றால் அளவற்ற நன்மைகளையும் செல்வத்

தையும் சுக போகத்தையும் வழங்குவார். வான நூலின் படி இவருடைய மண்டலம் சனி மண்டலமாகும். இது சூரியனைச் சுற்றி வரும் ஒன்பது கிரகங்களில் ஒன்று. பூமியில் 29½ ஆண்டுகள் சனிமண்டலத்தில் ஒரு ஆண்டாகும். திருநள்ளாறு இவரின் விசேட தலமாகும். இத்தலத்தில் வைத்தே நளமகாராசனின் சனி தோஷத்தை இவர் நீக்கினார். இவரைப் போல் கெடுப்பவருமில்லை கொடுப்பவருமில்லை. இவருக்குரிய விசேடநாள் சனிக்கிழமையாகும். அத்தினத்தில் திரிகரண சுத்தியுடன் இவரை வழிபட்டால் சகல ஐசுவரியங்களையும் கொடுப்பார்.

# புரட்டாதிச் சனி விரதம் அனுஷ்டிக்கும் முறை

சனி பகவானால் பாதிக்கப்பட்டவர் களும் சனித்திசை நடப்பவரும் ஏனையோ ரும் சனிக்கிழமை விரதமிருந்து விசேட மாகப் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக் கிழமைகளில் ஆசாரசீலர்களாக நவக் கிரக நாயகர்கள் உள்ள திருக்கோயி லுக்குச் சென்று சனீஸ்வரனுககும் ஏனைய கிரகங்களுக்கும் அபிஷேகம் செய்வித்து. நிறப்புத்தாடைகள் அணி வித்து கருங் குவளை. வன்னி இலை போன்றவற்றால் அர்ச்சித்து. எள்ளுச் சாதத்தைக் காகத்துக்குக் கொடுத்து. உங்கள் பெயர். நட்சத்திரத்தைப் பூசகரி டம் கூறி அதன் பெயரில் சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்வித்துப் பின் மண்சட்டி

யில் நல்லெண்ணைக்குள் கறுப்புத் துணியிலான எள்ளுப் பொட்டலத்தை வைத்து விளக்கேற்றி. பயபக்தியுடன் திரிகரண சுத்தியுடனும் நவக்கிர கங்களை தேவார பாராயணத்துடனும். திருக்கோளறு பதிகம். சனி பகவான் தோத்திரம். சனிபகவான் அஸ்டோத்தர சத நாமாவளி. நவக்கிரக போற்றி. சனீஸ்வரர் போற்றி போன்றவற்றை பாராயணம் செய்துகொண்டு. குறைந்தது ஒன்பது முறையாவது வலம் வந்து தீபத்தை சனிபகவான் முன்வைத்து வணங்கி இரும்புச்சட்டியில் நல்லெண்ணையை விட்டு அதில் சனி இருப்பதாக பாவனை செய்து தன் நிழலை அதில் பார்த்து. அந்த ணர்களுக்கும். ஏழைகளுக்கும் தானம் செய்தால் சனியினால் ஏற்படும் பீடைகள் நீங்கப் பெற்று நீண்ட ஆயுளையும் விரும்பிய ஐசுவரியங்களையும் பெறலாம்.

# சனி பகவான் தோத்திரம்

காப்பு (வெண்பா)

தேவரெண் டிசைக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதைபுகலக்
காரணிந்த யானைமுகன் காப்பு.

ஆதிவேதாந்த முதலரிய ஞான மைந்தெழுத்தினுட்
பொருள யமன் மாலோடும்
சோதி சிற்றம் பலத்தி லாடி நின்ற சுடரொளியை
நீ பிடித்த தோஷத்தாலே
பாதிமதிச் சடைக்கணிய அரவம் பூணப் பதியிழக்கச்
சுடலை தனிற் பாடியாடச்
சாதியில்லா வேடனெச்சிற் றின்ன வைத்தாய்
சனியனே காகமேறும் தம்பிரானே. 1

வேலவனை வேங்கை மரமாக்கி வைத்தாய்
விறகு வெட்டிச் சொக்கர் தமை விற்கவைத்தாய்
மாலினியை உரலோடு கட்டிவைத்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில் வைத்தாய்

காலனை மார்க்கண்டனுக்காய் அரனுதைத்த
காரணமும் நீ பிடித்த கருமத்தாலே
சாலவுனையான் தொழுதே எனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே. 2

மஞ்சு தவழ் அயோத்தியில் வாழ் தசரதன்றன்
மக்களையும் வனவாசம் ஆக்கி வைத்தாய்
பஞ்சவர்கள் சூதினால் பதியிழந்து
பஞ்சுபடும் பாடை ஐவர் படச்செய்வித்தாய்
எஞ்சலிலா வரிச்சந்திரன் பெண்டை விற்றே
இழி குலத்திலடிமையுற விசைய வைத்தாய்
தஞ்சமென வுனைப்பணிந்தேன் எனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. 3

அண்டமாயிரத் தெட்டு மரசு செய்த
வடல் சூரபத்மனையும் அடக்கி வைத்தாய்
மண்டலத்தை ஆண்ட நளச் சக்ரவர்த்தி
மனைவியோடு வனமதனில் அலையச் செய்தாய்
விண்டலத்தை பானுகோபன் றன்னாலே
வெந்தணலாய்ச் சூரரை வெருவச் செய்தாய்
தெண்டனிட்டே னெந்த நாளுமெனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே. 4

அண்டர் கோன் மேனியிற் கண்ணாக்கி வைத்தாய்
அயன் சிரத்தை வயிரவனாலறுக்க வைத்தாய்
திண்டிறல்கொள் கௌதம னாலகலிகைதான்
சிலையாகவே சாபமுறவே செய்தாய்
தண்டரள நகையிரதி மாரன்றன்னைச்
சங்கரனார் நுதல் விழியிற்றணல் செய்வித்தாய்
சண்டமிலாதுனைத் தொழுதேனெனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே. 5

பாருலவு பரிதியைப் பல்லுதிர வைத்தாய்
பஞ்சவர்க்குத் தூது பீதாம்பரனை வைத்தாய்
தாருலவு வாலி சுக்ரீவன் றம்மைத்
தாரையினாற் றீராதசமர் செய்வித்தாய்
சூரனெனுமிலங்கை யிராவணன் நன்றங்கை
சூர்ப்பனகை மூக்கு முலை துணி செய்வித்தாய்
தாரணியு மணி மார்பாவெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. 6

சுக்கிரன்றன் கண்ணிழந்தான் லங்கையாண்டு
துலங்கும் ராவணன் சிரம்கண்டிக்க வீழ்ந்தான்
மிக்க புகழிரணியன்றான் வீறழிந்தான்
விளங்கு திரிபுராதிகளும் வெந்து மாண்டார்
சக்கரத்தாலுடலறுத்தான் சலந்தரன்றான்
தாருகா சூரனுமே சமரில் மாண்டான்
தக்கன் மிகச் சிரமிழந்தானின் தோஷத்தால்
சனியனே காகமேறும் தம்பிரானே. 7

அந்தமரனா ஐங்கரன் கொம்பறவே செய்தாய்
அறு முனிவர் மனைவியர் கற்பழியச் செய்தாய்
சந்திரன் தன் கலையிழந்து தழைக்கச் செய்தாய்
சங்கரனைப் பிச்சை தானெடுக்கச் செய்தாய்
தந்தி முகச் சூரனுயிர் தளரச் செய்தாய்
சாரங்கதரன் கரத்தைத் தறிக்கச் செய்தாய்
சந்ததமும் உனைப்பணிவே னெனைத் தொடாதே
சனியனே காகமேறும் தம்பிரானே. 8

சீதை தனையிராவணனாற் சிறை செய்வித்தாய்
தேவர்களைச் சூரனாற் சிறை செய்வித்தாய்
மாதுதுரோபதை துகிலை வாங்கு வித்தாய்
மகேஸ்வரனையுமை பிரியும் வகை செய்வித்தாய்
போதிலயன்றா ளிற்றலை பூட்டி வைத்தாய்
பொதிகையினில் அகத்தியனைப் பொருத்தச் செய்தாய்
தாதுசேர்மலர் மணிமார்பா யெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே. 9

அப்பர்தமைக் கருங்கல்லோடலையிற் சேர்த்தாய்
யரனடியில் முயலகனை யடங்கச் செய்தாய்
செப்பு மாணிக்கர் தமைச் சிறையிலிட்டாய்
ஸ்ரீ ராமனை மச்சவுரு வெடுக்கச் செய்தாய்
ஒப்பிலாலனுமான் வாலிலொளி தீயிட்டாய்
ஒலி கடலினஞ்சை யரனுண்ண வைத்தாய்
தப்பிலா துனைத் தொழு தேனெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.10

நீரினையுண்டெழுமேக வண்ணா போற்றி
நெடுந்தபத்திலறு கமலக் கண்ணா போற்றி
சூரியன்றன் தவத்தில் வந்த பாலா போற்றி
துலங்கு நவக்கிரகத் துண்மேலா போற்றி
காரி யென் பெயர்களுப காரா போற்றி
காசினியிற் கீர்த்தி பெற்ற தீரா போற்றி
மூரி கொளு நோய் முகவா முடவா போற்றி
முதுமகளின் முண்டகத்தாள் போற்றி போற்றி. 11

சூரியன் சோமன் செவ்வாய்
சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியனி இராகு கேது
கடவுளரொன்பா னாமத்
தாருயச் சக்கரத்தைத்
தரித்திரர் பூசித்தாலும்
பாரினிற் புத்திரருண்டாம்
பாக்கியம் நல்குந் தானே. 12

# சனீஸ்வரன் போற்றி

இனிய வாழ்வருளி இருதயத் திருக்கும்
சனீஸ் வரனென்னும் தந்தையே போற்றி
சாயா தேவியும் தபனனும் பெற்ற
சேயே போற்றி திறலார் நமனின்
தம்பியே போற்றி தழுவு மீரிராசிகள்
கும்பமும் மகரமும் குறித் தமர்ந் தெமக்குநீ
ஆயுளும் வளமும் அருட்கலை நிறையும்
தோயும் பதவியும் தொல்லிரு நிதியும்
ஞானமும் வீடும் நலம்சேர் வரமும்
மேனெறி வாழ்வும் விரவிடு வலிமையும்
அமைப்புட னருளும் அப்பா போற்றி
இமைப் பொழுதேனும் எண்ணாதவருக்கு
இடர்பல காட்டி இறுதியி லின்பக்

தொடைப் பேறளிக்கும் குருவே போற்றி
அம்புவில் சூலம் அபயம் வரதம்
நம்பினர்க் குதவும் நாற்கரத் தேந்திக்
கழுகு வாகனத்தும் காக வாகனத்தும்
அழகனா யிருக்கும் ஐயனே போற்றி
கூடுசீர் படைத்த குளிகனின் தந்தையே
ஆடல்பல திகழ் அதி தேவதையாய்
உரைத்திடும் யமனார் ஒளிரும் வலத்திலும்
பிரத்தி யதிதேவதை பிரஜாதி யிடப்
புறத்திலும் பொலியப் பொருத்திய கருமை
நிறத்திரு மேனியும் நிறைகருஞ் சந்தனப்
பூச்சும் வன்னிப் பூவும் மாலையும்
காட்சிக் கினிய கருணைத் தோற்றமும்
அட்சரக்கரத்தில் அக்கை மாலையுங் கொண்டு
எட்டுப் பரியில் இரும்பு இரதத்தில்
மேருவை வலம் வரம் வேந்தனே போற்றி

காரிய மெல்லாம் கருதிய வண்ணமே
சித்திக்கும் நன்மை செய்வாய் போற்றி
உத்தம மேற்றிசைக் குரியவா போற்றி
தாமத குணமும் தனிச்சுவைக் கசப்பும்
தானிய மெள்ளும் தண்கருங் குவளையும்
மாநீல மணியும் வன்னியும் இரும்பும்
ஆவலோ டர்ப்பணித் தடிபணி வோர்க்கு
இயைந்த சுகந்தரும் ஈஸ்வரா போற்றி
நயந்த தெய்வங்களின் நாமங்க ளெல்லாம்
சொல்லித் துதிக்கத் தோன்றும் சுதந்திரா
தொல்லைப் பிறவித் தொடர்வினை அறுத்துப்
புதுப்பெரு வாழ்வும் புந்தியில் சாந்தமும்
நிதிப்பெரு நிலையும் நீணிலப் புகழும்
பூரண ஆயுளும் பொன்மனை மைந்தரும்
சீருறக் காட்டும் செல்வா போற்றி
முதுமகன் பிணிமுகன் மூடவன் காரி

துதிமிகு மந்தன் சுஸ்கோ தரனெனப்
பன்னாமங்கள் படைத்தவா சரணம்
மன்னுயிர் வேண்டும் வரமெலா மீந்து
பொதுநடங் காட்டும் புனிதா சரணம்
விதியழித் தெழுதும் வீரா சரணம்
ஓம் கணபதே நமோ ஓம் நமச்சிவாயம்
ஓம் சிவசத்தி ஓம் நாராயண
ஓம் சரவணபவ ஓம் எனுமடியார்
ஓமெனும் வெளியில் ஓங்கு பேறெய்த
நற்கதி காட்டும் நாதா சரணம்
சொற்பிழை பொருட்பிழை தொழும்பிழை முதலாம்
குறையெலாம் பொறுப்பாய் - குருவே சரணம்
மறைபுகழ் சனீஸ்வரா சரணம் சரணம்.

# சனி அஷ்டோத்தர சத நாமாவளி

| | | | |
|---|---|---|---|
| 01. | ஓம் | ஸனைஸ்சராய | நம: |
| 02. | ஓம் | ஸாந்தாய | நம: |
| 03. | ஓம் | ஸர்வாபீஷ்டப்ரதாயிநே | நம: |
| 04. | ஓம் | ஸாண்யாய | நம: |
| 05. | ஓம் | வரேண்யாய | நம: |
| 06. | ஓம் | ஸர்வேஸாய | நம: |
| 07. | ஓம் | ஸௌம்யாய | நம: |
| 08. | ஓம் | ஸுரவந்த்யாயம: | நம: |
| 09. | ஓம் | ஸுரலோகவிஹாரிணே | நம: |
| 10. | ஓம் | ஸுகாஸம்நாபவிஷ்டாய | நம: |
| 11. | ஓம் | ஸுந்தராய | நம: |
| 12. | ஓம் | கநாய | நம: |
| 13. | ஓம் | கநரூபாய | நம: |
| 14. | ஓம் | கநாபரண தாரிணே | நம: |
| 15. | ஓம் | கநஸாரவிலேபாய | நம: |
| 16. | ஓம் | கத்யோதாய | நம: |
| 17. | ஓம் | மந்தாய | நம: |

| | | | |
|---|---|---|---|
| 18. | ஓம் | மந்தசேஷ்டயா | நம: |
| 19. | ஓம் | மஹநீயகுணாத்மநே | நம: |
| 20. | ஓம் | மர்த்யபாவந பாதாய | நம: |
| 21. | ஓம் | மேஹஸாய | நம: |
| 22. | ஓம் | சாயாபுத்ராய | நம: |
| 23. | ஓம் | ஸர்வாய | நம: |
| 24. | ஓம் | ஸததூணிரதாரிணே | நம: |
| 25. | ஓம் | சரஸ்த்திரஸ்வபாவாய | நம: |
| 26. | ஓம் | அசஞ்சலாய | நம: |
| 27. | ஓம் | நீலவர்ணாய | நம: |
| 28. | ஓம் | நித்யாய | நம: |
| 29. | ஓம் | நீலாஞ்ஜநநிபாய | நம: |
| 30. | ஓம் | நீலாம்பரவிபூஷாய | நம: |
| 31. | ஓம் | நிஸ்சலாய | நம: |
| 32. | ஓம் | வேத்யாய | நம: |
| 33. | ஓம் | விதிரூபாய | நம: |
| 34. | ஓம் | விரோதா தார பூமயே | நம: |
| 35. | ஓம் | பேதாஸ்பதஸ்வபாவாய | நம: |
| 36. | ஓம் | வஜ்ரதேஹாய | நம: |

| | | | |
|---|---|---|---|
| 37. | ஓம் | வைராக்யதாய | நம: |
| 38. | ஓம் | வீராய | நம: |
| 39. | ஓம் | வீதரோகபயாய | நம: |
| 40. | ஓம் | விபத்பரம்பரேஸாய | நம: |
| 41. | ஓம் | விஸ்வவந்தயாய | நம: |
| 42. | ஓம் | க்ருத்ரவாஹாய | நம: |
| 43. | ஓம் | கூடாய | நம: |
| 44. | ஓம் | கூர்மாங்காய | நம: |
| 45. | ஓம் | குரூபிணே | நம: |
| 46. | ஓம் | குத்ஸிதாய | நம: |
| 47. | ஓம் | குணாட்யாய | நம: |
| 48. | ஓம் | கோசராய | நம: |
| 49. | ஓம் | அவித்யாமூலநாஸாய | நம: |
| 50. | ஓம் | வித்யாவித்யாஸ்வரூபிணே | நம: |
| 51. | ஓம் | ஆயுஷ்யகாரணாய | நம: |
| 52. | ஓம் | ஆபதுத்தர்த்ரே | நம: |
| 53. | ஓம் | விஷ்ணுபக்தாய | நம: |
| 54. | ஓம் | வஸிநே | நம: |
| 55. | ஓம் | விவிதாகமவேதிதே | நம: |

56. ஓம் விதிஸ்துத்யாய நம:
57. ஓம் வந்த்யாய நம:
58. ஓம் விருபாக்ஷாய நம:
59. ஓம் வரிஷ்ட்டாய நம:
60. ஓம் கரிஷ்டாய நம:
61. ஓம் வஷ்ராங்குஸதராய நம:
62. ஓம் வரதாபயஹஸ்தாய நம:
63. ஓம் வாமநாய நம:
64. ஓம் ஜ்யேஷ்டாபத்நீஸமேதாய நம:
65. ஓம் ஸ்ரேஷ்டாய நம:
66. ஓம் மிதபாஷிணே நம:
67. ஓம் கஷ்டௌக நாஸகர்த்ரே நம:
68. ஓம் புஷ்டிதாய நம:
69. ஓம் ஸ்துத்யாய நம:
70. ஓம் ஸ்தோத்ரகம்யாய நம:
71. ஓம் பக்திவஸ்யாய நம:
72. ஓம் பாநவே நம:
73. ஓம் பாநுபுத்ராய நம:
74. ஓம் பவ்யாய நம:

75. ஓம் பாவநயா நம:
76. ஓம் தநுர்மண்டயஸம்ஸ்த்தால நம:
77. ஓம் தநதாய நம:
78. ஓம் தநுஷ்மதே நம:
79. ஓம் தநுப்ரகாஸ தேஹாய நம:
80. ஓம் தாமஸாய நம:
81. ஓம் அஸேஷ ஜநவந்த்யாய நம:
82. ஓம் விஸேஷபலதாயிநே நம:
83. ஓம் வஸீக்ரு தஜநேஸாய நம:
84. ஓம் பஸூநாம்பதயே நம:
85. ஓம் கேசராய நம:
86. ஓம் ககேஸாய நம:
87. ஓம் கநநீலாம்பராய நம:
88. ஓம் காடிந்யமாநஸாய நம:
89. ஓம் ஆர்யகணஸ்துத்யாய நம:
90. ஓம் நீலச்சத்ராய நம:
91. ஓம் நித்யாய நம:
92. ஓம் நிர்குணாய நம:
93. ஓம் குணாத்மனே நம:

| | | | |
|---|---|---|---|
| 94. | ஓம் | நிராமயாய | நம: |
| 95. | ஓம் | நந்தயாய | நம: |
| 96. | ஓம் | வந்தநீயாய | நம: |
| 97. | ஓம் | தீராய | நம: |
| 98. | ஓம் | திவ்யதேஹாய | நம: |
| 99. | ஓம் | தீநார்த்திஹரணாய | நம: |
| 100. | ஓம் | தைந்யநாஸகராய | நம: |
| 101. | ஓம் | ஆர்ஜநகண்யாய | நம: |
| 102. | ஓம் | க்ரூராய | நம: |
| 103. | ஓம் | க்ரூரசேஷ்டாயு | நம: |
| 104. | ஓம் | காமக்ரோதகராய | நம: |
| 105. | ஓம் | களத்ரபுத்ரஸத்ருத்வ காரணாய | நம: |
| 106. | ஓம் | பரிபோஷிதபக்தாய | நம: |
| 107. | ஓம் | பரபீதிஹராய | நம: |
| 108. | ஓம் | பக்தஸங்கமநோ பீஷ்டபலதாய | நம: |



# கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறு
முடனாய நாள்களவைதாம்
அன்பொடு நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்களான பலவும்
அதிகுண நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்ட னெந்தை மடவாடனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடு நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்
மடவாடனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்ற நதிசூடிவந்தெ
னுளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிளமுலை நன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிளமதியு மப்பு முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதமிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 7


வேள்பட விழிச்செய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்றனோடு
மிடரான வந்து நலியா
ஆழ்கடனல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடுதேவர்
வருகாலமான பலவும்
அலைகடன்மேரு நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
புத்தரொடமணை வாதிலழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்கும் நிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளுமடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானி
லரசாள் வராணை நமதே ! 11

திருச்சிற்றம்பலம்




# நவக்கிரகங்கள்

# நவக்கிரக போற்றி

## சூரியன் (ஞாயிறு)

காசினியிருளை நீக்கும் கதிரொளி யாகியெங்கும்
பூசனையுலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தைநல்கும்
வாசியேழுடைய தேர்மேல் மகாகிரிவலமாய் வந்து
தேசிகாவெனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

**ஓம். அம். ஆதித்யாய நமஸ்தே.**

## சந்திரன் (திங்கள்)

அலைகட லதனினின்று மன்றுவந் துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுளென் றெவருமேத்துஞ்
சிலைநுத லுமையாள்பங்கன் செஞ்சடைப் பிறையாய்மேரு
மலைவல மகாவந்த மதியமே போற்றி போற்றி.

**ஓம். சம். சோமாய நமஸ்தே.**

## அங்காரகன் (செவ்வாய்)

வசனநற் றைரியத்தோடு மன்னவர்சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றியாண்மை
நிசமுட னவரவர்க்கு நீணிலந் தனிலளிக்குங்
குசனில மகனாஞ் செவ்வாய் குறைகழல் போற்றி போற்றி.

**ஓம். கும். அங்காரகாய நமஸ்தே.**

## புதன்

மதனநூல் முதலாநான்கு மறைபுகழ் கல்விஞானம்
விதமுட னவரவர்க்கு விஞ்ஞைகளருள் வோன்திங்கள்
சுதன்பல சுபாபங்கள் சுகம்பல கொடுக்கவல்லன்
புதன்கவிப் புலவர்சீர்மால் பொன்னடி போற்றி போற்றி

**ஓம். பும். புதாய நமஸ்தே.**

## குரு (வியாழன்)

மறைமிகு கலைநூல்வல்லோன் வானவர்க்கரசன் மந்திரி
நறைசொரி கற்பகப்பொன் னாட்டிக்கதி பனாகி
நிறைதனஞ் சிவிகைமண்ணி னீடுபோகத்தை நல்கும்
இறைவன் குருவியாழ னிருமலர்ப்பாதம் போற்றி.

**ஓம். குங். குரு தேவாய நமஸ்தே.**

## சுக்கிரன் (வெள்ளி)

மூர்க்கவான் சூரன்வாணன் முதலினோா குருவாய்வையங்
கார்க்காவான் மழைபெய்விங் கவிமகன் கனகமீவோன்
தீர்க்கவானவர்கள் போற்றச் செத்தவர் தமையெழுப்பும்
பார்க்கவான் சுக்ராசாரி பாதபங்கயமே போற்றி.

**ஓம். சும். சுக்கிரதேவாய நமஸ்தே.**

## சனி

முனிவர்கள் தேவரேழு மூர்த்திகண் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமையதல்லா துண்டோ
கனிவுளதெய்வம் நீயே கதிர்சேயே காகமேறுஞ்
சனியனே யுனைத்துதிப்பேன் தமியனேற்கருள் செய்வாயே.

**ஓம். ரம். சனிதேவாய நமஸ்தே.**

## இராகு

வாகுசேர் நெடுமான் முன்னம் வானவர்க் கமுதமீயப்
போகுமக்காலை யுன்றன் புணர்ப்பினாற் சிரமேயற்றுப்
பாகுசேர் மொழியாள்பங்கன் பரன்கையில் மீண்டும் பெற்ற
ராகுவேயுனைத் துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே.

**ஓம். ரம். இராகுதேவாய நமஸ்தே.**

## கேது

மாதுசேர்நெடுமால் முன்னால் மகாகிரி வலமேபோந்து
நீதிநெறி நடுவகுத்து நிறைதனந்தந் தையம் தீர்க்கும்
மாதுசேய் கதிர்விழுங்கும் சிவன்கையில் சிரமேபெற்ற
கேதுவேயுனை துதிப்பேன் கீர்த்தியாய் ரட்சிப்பாயே.

**ஓம். உம். கேதுதேவாய நமஸ்தே.**

## நவக்கிரகங்களின் புஷ்பங்கள், சமித்துக்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் | செந்தாமரை | எருக்கு |
| சந்திரன் | வெள்ளலரி | முருக்கு |
| செவ்வாய் | சண்பகம் | கருங்காலி |
| புதன் | வெண்காந்தள் | நாயுறுவி |
| குரு | முல்லை | அரசு |
| சுக்கிரன் | வெண்டாமரை | அத்தி |
| சனி | கருங்குவளை | வன்னி |
| இராகு | மந்தாரை | அறுகு |
| கேது | செவ்வல்லி | தருப்பை |

## நவக்கிரகங்களின் தானியங்கள், சுவைகள்

| | | |
|---|---|---|
| சூரியன் | கோதுமை | கார்ப்பு |
| சந்திரன் | பச்சரிசி | தித்திப்பு |
| செவ்வாய் | துவரை | துவர்ப்பு |
| புதன் | பச்சைப்பயறு | உவர்ப்பு |
| குரு | கடலை | தித்திப்பு |
| சுக்கிரன் | மொச்சை | தித்திப்பு |
| சனி | எள்ளு | கைப்பு |
| இராகு | உளுந்து | புளிப்பு |
| கேது | கொள்ளு | புளிப்பு |

## கிரக ஆசனம்

| | |
|---|---|
| சூரியனுக்கு | வட்ட வடிவம் |
| சந்திரனுக்கு | சவுக்க வடவம் |
| செவ்வாய்க்கு | திரிகோண வடிவம் |
| புதனுக்கு | அம்பு வடிவம் |
| குருவுக்கு | நீண்ட சவுக்கு வடிவம் |
| சுக்கிரனுக்கு | ஐங்கோண வடிவம் |
| சனிக்கு | வில் வடிவம் |
| இராகுக்கு | கொடி வடிவம் |
| கேதுக்கு | முச்சில் வடிவம் |

## கிரக உலோக வஸ்த்திரம்

| | | |
|---|---|---|
| சூரியனுக்கு | தம்பாக்கு | தாமரைச் சிவப்பு |
| சந்திரனுக்கு | ஈயம் | வெண்மை |
| செவ்வாயக்கு | செம்பு | சிவப்பு |
| புதனுக்கு | பித்தளை | பச்சை |
| குருவுக்கு | பொன் | இளம்பச்சை |
| சுக்கிரனுக்கு | வெள்ளி | வெள்ளை |
| சனிக்கு | இரும்பு | நீலம் |
| இராகுக்கு | கருங்கல் | மஞ்சள் |
| கேதுக்கு | துருக்கல் | பவ வர்ணம் |

## கிரக இரத்தினம்

| | |
|---|---|
| சூரியனுக்கு | மாணிக்கம் |
| சந்திரனுக்கு | முத்து |
| செவ்வாய்க்கு | பவளம் |
| புதனுக்கு | பச்சை |
| குருவுக்கு | புஷ்பராகம் |
| சுக்கிரனுக்கு | வைரம் |
| சனிக்கு | நீலம் |
| இராகுக்கு | கோமேதகம் |
| கேதுக்கு | வைடூரியம் |

## நவக்கிரகங்களின் பலவித அமைப்புகள்

1) சுசீந்திரம்: நவக்கிரகங்கள் மண்டபத்தின் மேல்த்தளத்தில் செதுக்கப்பட்டுள்ளன. வழிபடு பவர்கள் மேல் நோக்கிப்பார்க்கவேண்டும்.

2) வைத்தீஸ்வரன் கோயில் : நவக்கிரகங்கள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன.

3) பூவிருந்தவல்லி வைத்தீஸ்வரன் கோயில் : திருவேற்காடு மாரி அம்மன் ஆகிய கோயில் களில் நவக்கிரகங்கள் வட்டவடிவமாக அமைக்கப்பட்டுள்ளன.

4) திருநள்ளாறு : சனிபகவானுக்கு விஷேட சந்நிதி. நளமகாராசன் வழிபட்ட இடம்.

5) சூரியனார் கோயில் : இங்கு சூரியனுக்கும் ஏனைய கிரகங்களுக்கும் தனித்தனிக் கோயில்கள் உள்ளன.

6) நவபாஷாணம் : நவக்கிரகங்கள் கடலில் இருக்கின்றன. இராமர் நவக்கிரக பூசை செய்த இடம்.

7) திருக்கேதீஸ்வரம் : கேது தனது சாபத்திலிருந்து தப்பித்துக்கொண்ட இடம்.

## நவக்கிரகங்களுக்குரிய விசேட தலங்கள்

| கிரகம் | திருத்தலம் | இடம் |
| --- | --- | --- |
| சூரியன் | சூரியனார் கோயில் | ஆடுதுறை (கும்பகோணத்துக்கும் கரைக்காலுக்கும் இடையில் உள்ளது.) |
| சனீஸ்வரர் | திருநள்ளாறு | கும்பகோணத்துக்கும் காரைக்காலுக்கும் இடையில் உள்ளது. |
| சந்திரன் | திங்களூர் | திருவையாற்றிலிருந்து 18 கி. மீ. தூரத்தில் |
| சந்திரன் | திருப்பதி | திருப்பதி ஏழுமலையிலுள்ளது. |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | வைத்தீஸ்வரர் கோயில் | சீர்காழியிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. |
| செவ்வாய் | பழனித்திருக்கோயில் | பழனி மலையில் |
| புதன் | திருவெண்காடு | மயிலாடுதுறை அருகில் |
| புதன் | மதுரை மீனாட்சியம்பாள் | மதுரை நகரில் |
| குரு | திருத்தென்குடித்திட்டை | தஞ்சாவூரில் இருந்து மிலட்டூர்த் செல்லும் பாதையில் உள்ளது. |
| குரு | திருச்செந்தூர் திருக்கோயில் | திருச்செந்தூர் கடலோரத்தில் |

| | | |
|---|---|---|
| சுக்கிரன் | திருநாவலூர் | உளுந்தூர் பேட்டையிலிருந்து 15கி.மீ. தூரத்தில் |
| சுக்கிரன் | ஸ்ரீ ரங்கநாதர் கோயில் | திருச்சி அருகில் 3கி. மீ தூரத்தில் |
| கேது. இராகு | திருகாளகஸ்தி | ஆந்திரா. தமிழ்நாடு எல்லையில் |
| கேது | திருக்கேதீஸ்வரம் | இலங்கை. மன்னாரில் உள்ளது. |
| இராகு | திருநாகேச்சுரம் | கும்பகோணத்திலிருந்து 6 கி. மீ. தொலைவில் |



கழக வெளியீடு-15

வெளியிடுவோர்:

இடைக்காடு இந்துநெறிக்கழகம்
இடைக்காடு, அச்சுவேலி.